மரம் நடுவீர் மழைநீர் சேமிப்பீர்

# புதுக்கோட்டை நகராட்சி

## 2020 – 2021 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

# புதுக்கோட்டை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2020 – 2021

# ( 01.04.2020 முதல் 31.03.2021 வரை)

**அமைப்பும் நிர்வாகமும் :-**

வரலாற்று சிறப்பு மிக்க புதுக்கோட்டை நகராட்சி 1912–ம் ஆண்டு 3–ம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு படிப்படியாக உயர்ந்து அரசாணை ( நிலை) எண்.303, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.03.1988 ம் தேதி முதல் தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகரம் 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியிலும் அமைந்துள்ளது. இது நிலவியல் குறுக்கு கோடு 78–79 ல் அடங்கியுள்ளது. கடல் மட்டத்திற்கு மேல் 87.28 மீ உயரத்தில் உள்ளது. திருச்சி தொகுதி பாரளுமன்ற உறுப்பினர்களுடன் புதுக்கோட்டை சேர்க்கப்பட்டது.

**எல்லை :-**

புதுக்கோட்டை நகராட்சி ஏற்கனவே 12.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 39 வார்டுகளைக்கொண்டதாக இருந்தது. அரசாணை நிலை எண்.12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.06.01.2011–ம் தேதிய அரசு உத்தரவின்படி புதுக்கோட்டை பஞ்சாயத்து முழுவதும் நகராட்சிப்பகுதியுடன் இணைக்கப்பட்டது. 25.10.2011 முதல் பஞ்சாயத்து பகுதியை நகராட்சிப்பகுதிகளாக செயல்பட்டு வருகிறது. புதுக்கோட்டை பஞ்சாயத்து பகுதி 9 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நகராட்சி 12.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் சேர்க்கப்பட்டு தற்போது மொத்த 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக நகராட்சி உள்ளது. ஏற்கனவே நகராட்சியில் உள்ள 39 வார்டுகளுடன் பஞ்சாயத்து பகுதிகளை 5 வார்டுகளாக பிரிக்கப்பட்டு உட்பிரிவு செய்து நகராட்சியுடன் சேர்த்து மொத்தம் 42 வார்டுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

**மக்கள் தொகை :-**

| | | |
|---|---|---|
| 1981– ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 87952 |
| 1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 98619 |
| 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மக்கள் தொகை | : | 109217 |
| 2011–ம் ஆண்டின் உத்தேச மக்கள் தொகை<br>ஆண்கள் – 72053, பெண்கள்– 71693, இதரர்–2 = 143748 | : | **143748** |

**வார்டு எண்கள் :– (2011 முதல் 2016 வரை)**

பெண் உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை 14 ஆகும். ( வார்டுகள்– 6, 7, 18, 24, 25, 26, 29, 30, 33, 34, 36, 37, 40, 42 ).

ஆதிதிராவிடர் உறுப்பினர் வார்டு ( பொது)

ஆதிதிராவிடர் உறுப்பினர் வார்டு ( பெண்கள்)

**நகர்மன்றம் :–(2011 முதல் 2016 வரை)**

தேர்தல் நடைபெற்ற பின்பு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் நகர்மன்ற உறுப்பினர்கள் 42 பதவி வகித்து வந்தனர்.

25.10.2016 முதல் இன்றைய தேதி வரை நகராட்சி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலராக பணியாற்றி வருகின்றார்கள். மேலும், கீழ்க்கண்ட ஆணையாளர்கள் 01.04.2020 முதல் 31.03.2021 வரை ஆணையாளர் மற்றும் தனி அலுவலராக பணிபுரிந்து வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி பொறியாளர் , ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர் | **1.** | ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA.,<br>(01.04.2020 முதல் 02.08.2020 வரை) |
| ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் | **2.** | A. ஜஹாங்கீர் பாஷா,<br>( 03.08.2020 முதல் 12.11.2020 வரை) |
| நகராட்சி பொறியாளர் , ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர் | **3.** | ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA.,<br>(13.11.2020 முதல் 25.02.2021 வரை) |
| மேலாளர் மற்றும் ஆணையாளர் (பொ) மற்றும் தனிஅலுவலர் | **4.** | ப. கிருஷ்ணவேணி,<br>(26.02.2021 முதல் 31.03.2021) |

புதுக்கோட்டை நகராட்சி 01.04.2020 முதல் 31.03.2021 வரை நகராட்சி ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர் , திரு. ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA.,01.04.2020 முதல் 02.08.2020 வரையிலும், திரு A. ஜஹாங்கீர் பாஷா, 03.08.2020 முதல் 12.11.2020 வரையிலும், திரு. ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA., 13.11.2020 முதல் 25.02.2021 வரையிலும், திருமதி. ப. கிருஷ்ணவேணி, 26.02.2021 முதல் 31.03.2021 பணியாற்றியவர்களால் கீழ்க்கண்டுள்ளவாறு கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மொத்தக் கூட்டங்கள் | 0 |
| இயல்புக் கூட்டங்கள் | 0 |
| அவசரக் கூட்டங்கள் | 0 |
| முடிக்கப்பட்ட பொருட்கள் | 653 |
| ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள் | 0 |

| ஆணையர் மற்றும் அலுவலர்கள் | | | |
|---|---|---|---|
| **ஆணையாளர்** | | | |
| 1. | ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA., | 01.04.2020 | 20.08.2020 |
| 2. | A. ஜஹாங்கீர் பாஷா, | 03.08.2020 | 12.11.2020 |
| 3. | ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA., | 13.11.2020 | 25.02.2021 |
| 4. | ப. கிருஷ்ணவேணி, | 26.02.2021 | 31.03.2021 |
| **நகராட்சி பொறியாளர்** | | | |
| 1. | திரு.ஜீ.சுப்பிரமணியன், பி.இ.எம்.பி.எ, நகராட்சி பொறியாளர் | 01.04.2020 | 31.03.2021 |
| **நகர்நல அலுவலர்** | | | |
| 1. | டாக்டர். யாழினி , M.B.B.S., | 01.04.2020 | 01.06.2020 |
| 2. | ஜீ. சுப்பிரமணியன், BE.,MBA., (நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) மற்றும் நகர்நல அலுவலர் | 02.06.2020 | 02.08.2020 |
| 3 | A. ஜஹாங்கீர் பாஷா, (நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்நல அலுவலர் | 03.08.2020 | 16.08.2020 |
| 4 | டாக்டர். K. பூபதி , M.B.B.S., | 17.08.2020 | 31.03.2021 |
| **நகரமைப்பு அலுவலர்** | | | |
| 1. | திரு.A.ரமேஷ், நகரமைப்பு அலுவலர் | 01.04.2020 | 30.09.2020 |
| 2. | திரு.எஸ். ஜெய்சங்கர், B.E.,M.Tech.,MBA., நகரமைப்பு அலுவலர், | 01.10.2020 | 25.02.2021 |
| 3. | திருமதி. கே. மாலதி, B.E., , நகரமைப்பு அலுவலர். | 26.02.2021 | 31.03.2021 |
| **மேலாளர்** | | | |
| 1. | திருமதி. ப. கிருஷ்ணவேணி , மேலாளர் | 01.04.2020 | 31.03.2021 |
| **கணக்கர்** | | | |
| 1. | S. பிச்சைமைதீன் | 01.04.2020 | 18.07.2020 |
| 2. | G. அமுதவள்ளி, உதவியாளர் | 19.07.2020 | 22.07.2020 |
| 3. | V. விஜயா ஸ்ரீ | 23.07.2020 | 31.03.2021 |

| வருவாய் அலுவலர் | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி. வே. விஜயாஸ்ரீ | 01.04.2020 | 20.07.2020 |
| 2. | திரு **J**. காந்தி | 21.07.2020 | 31.03.2021 |

| பொதுப்பிரிவு : – | | | |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | – |
| 2. | கணக்கர் | 1 | – |
| 3. | உதவியாளர்கள் | 8 | 1 காலிப்பணியிடம் |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 19 | 1 காலிப்பணியிடம் |
| 5. | தட்டச்சர்கள் | 2 | 2 காலிப்பணியிடம் |
| 6. | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | – |
| 7. | கணினி உள்ளீடு செய்பவர் | 1 | 1 காலிப்பணியிடம் |
| 8. | பதிவறை எழுத்தர் | 3 | – |
| 9. | அலுவலக உதவியாளர் | 10 | – |

**மேலாண்மை :-**

அறிக்கையாண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கு ஏற்பட்ட ஊதியம் செலவு சென்ற ஆண்டில் **ரூ.18,77,23,795/–** செலவு ஆகியுள்ளது. நகராட்சி சொந்த கட்டிடத்தில் இயங்கிவருகிறது.

நகராட்சி வழக்குகள் அனைத்தும் அப்போதைக்கப்போது நகராட்சி வழக்கறிஞர் திரு.வெங்கடேசன் புதுக்கோட்டை நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை பி. மகேந்திரன் அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் முடிவானவற்றின் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

| 2020 – 2021 ல் நகராட்சியின் வழக்குகள் விபரம் | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | வழக்கு ஏற்கப்பட்டவை | மொத்தம் | முடிந்தவை | நிலுவையாக உள்ளவை |
| 11 | 42 | 53 | 11 | 42 |

**கொடிநாள் வசூல் 2020 – 2021 : –**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 7ம் நாள் கொடி நாள் தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு முன்னாள் இராணுவத்தினர் நலனுக்காக **2020 – 2021** ஆண்டின் இலக்காக இந்நகராட்சிக்கு ரூ. **2,20,000/–** வசூல் செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு அத்தொகை செலுத்தப்பட்டது.

**நிர்வாகம் : –**

அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணையின்படி விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு நிர்வாகம் சீராக நடைபெற்று வருகின்றது. ஊழியர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

சீருடை பெறத்தகுதியுடைய கடை நிலை ஊழியர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் மற்றும் மகப்பேறு ஆயாக்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் வழங்கப்பட்டது. சுகாதாரப் பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களுக்கு சுகாதார சாதனங்கள் வழங்கப்பட்டன.

**தகவல் மையம் : –**

பொதுமக்கள் நலனை முன்னிட்டு 02.08.1997–ம் நாள் முதல் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு காலதாமதம் தவிர்க்கப்பட்டு பொதுமக்களின் திருப்தியடையும் வகையில் பணிகள் உடனுக்குடன் நிறைவேற்றப்பட்டு வரப்படுகிறது. மேலும், 24 மணி நேரமும் நகராட்சி மணி 04322 222252 என்ற எண்ணில் பொதுமக்கள் குறைகள் அழைப்பிலோ வாட்ஸ் அப் மூலமாகவோ வரப்பெற்றதை சரிசெய்யப்பட்டு வருகிறது. மேலும் கட்டணமில்லா தொலைபேசி 1800 425 1529 என்ற எண்ணும் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சிக்கு வரும் கடிதங்கள் பொதுமக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் மீது கீழ்கண்டுள்ளவாறு மக்கள் சாசனத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வரிகுறைப்பு விண்ணப்பங்கள் மீது முடிவு செய்தல் | 30 நாட்கள் |
| 2 | சொத்துவரி கேட்பு பதிவேட்டில் வீட்டுவரி நகல் | 30 நாட்கள் |
| 3. | பிறப்பு, இறப்பு நகல் வழங்குதல் | 3 நாட்கள் |
| 4. | வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்குதல் | 7 நாட்கள் |
| 5. | கட்டிட அனுமதி விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து அனுமதி வழங்கல். | 30 நாட்கள் |
| 6. | அச்ச அருவருப்பு தக்க தொழில்கள் உரிமம் வழங்குதல் | 30 நாட்கள் |
| 7. | சொத்துவரி பெயர்மாற்றம் செய்தல் | 15 நாட்கள் |
| 8 | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்தல் | 15 நாட்கள் |

## பொறியியல் பிரிவு

## ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2020–2021ம் ஆண்டு

புதுக்கோட்டை நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் (IUDM) 2020–2021ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள அரசாணை (னு) எண்.303 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள்.9.9.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 5 சிப்பங்களாக பணி ஒதுக்கீடு செய்து பணி உத்தரவு 14.12.2020 ல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் |
|---|---|---|
| 1 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்:1,2,3இல் சாத்தப்பா நகர், சீனிவாசா நகர், கண்ணன் நகர், தில்லை நகர், ராம்நகர் 1, 2, 3 மற்றும் 8ம் வீதி, ராம் நகர் பிரதான சாலை (சிவானந்தபுரம் 1ம் வீதி முடிவிலிருந்து ராம்நகர், வெங்கிடாசலம் நகர் மற்றும் தைலாநகர், ராஜிவ்காந்தி நகர், சமத்துவபுரம் உள்சாலை, இறைவன்நகர், ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல | 2.00 |
| 2 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 31, 32, 17, 38, 41, 42 காந்திநகர் மற்றும் போஸ்நகர், நியூகோல்டன் நகர், கே.எல்.கே.எஸ். நகர், தமிழ்நகர் சாலை, சக்தி நகர், நியூ டைமண்ட் நகர், கலைஞர்நகர், அசோக் நகர், குறிஞ்சிநகர், ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல | 2.00 |
| 3 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 41, 39, 25, 24 நியூ கோல்டன் நகர் விரிவாக்கம், சுப்பிரமணியன்நகர், அழகர் நகர், செல்லையா நகர், முத்து நகர், மறைமலைநகர், ராஜகோபாலபுரம் பாறைப்பட்டி, திருவப்பூர் அம்மன் நகர், சின்னப்பா நகர் ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |
| 4 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 1, 2, 3, 12, 10 டிரைவர் காலனி, பெக்சல் நகர், இந்திரா நகர், நேரு நகர், காமதேனுநகர், தைலாநகர் ரோடு ஸ்கூல் முதல் சமத்துவபுரம் ரோடு வரை, நாய்ப்பள்ளம் ரோடு, மாப்பிள்ளையார் குளம் ரோடு, சிவானந்தபுரம் குறுக்கு தெரு, சார்லஸ் நகர், சுப்பிரமணியன் நகர், தைலா நகர் (ஜீனியஸ் ஸ்கூல் அருகில்), என்.ஜி.ஜி.ஓ காலனி, சாலை ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல் | 2.00 |
| 5 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்: 41இல் இ.பி. காலனி, பொன்நகர், குமரன் நகர், பாலாஜி நகர், வள்ளியப்பா நகர், பொன்னநகர் முதல் மேட்டுப்பட்டி இணைப்பு சாலை வரை, டைமண்ட் நகர், சேங்கைகொல்லை சாலை ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |
| | **மொத்தம்** | **10.00** |

## சிறப்பு சாலை திட்டம் (SRP)–2020–2021

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 –ன் கீழ் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.14.12.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 8 சிப்பங்களாக பணி ஒதுக்கீடு செய்து பணி உத்தரவு 17.02.2021 ல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

| . எண் | பணியின்பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.37 பெரியார் நகர், வார்டு எண். 39 சுப்பரமணிய நகர், சண்முக நகர், STP Site சாலை, KSM நகர், மீனாட்சி நகர், கூடல் நகர் மற்றும் மீனாட்சி நகர், வார்டு எண். 42 பொன்னம்பட்டி சாலை, வார்டு எண். 22 சந்தைப்போட்டை ஆகிய சாலைகளில் தார் சாலை அமைத்தல். | 2.00 |

| | | |
|---|---|---|
| 2 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.27 சாந்தநாதபுரம், வார்டு எண்.33 உசிலங்குலம், வார்டு எண்.5 திருக்கோகர்ணம், வார்டு எண்.1 சமத்துவபுரம், வார்டு எண். 34 சத்தியமூர்த்தி நகர், வார்டு எண்.20,28 தெற்கு பிரதாண சாலை, மேற்கு பிரதாண சாலை முதல் 4ம் வீதி , வார்டு எண். 13 காமராஜபுரம் 11,12,13,14 ஆகிய சாலைகளில் தார் சாலை அமைத்தல். | 2.00 |
| 3 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண். 16 காமராஜபுரம் 1,2,3,4,5 ம் வீதிகள், வார்டு எண். 37 பெரியார் நகர் இரட்டை சாலை மற்றம் குளத்துக்கரை சாலை, வார்டு எண். 40 பூங்கா நகர், வார்டு எண். 37 கம்பன் நகர், வார்டு எண். 15 காமராஜபுரம் 19, 20 ம் வீதி, வார்டு எண். 39 கலீப் நகர் ஆகிய சாலைகளில் தார் சாலை அமைத்தல். | 2.00 |
| 4 | வார்டுஎண். 1 தைலா நகர், வசந்தபுரி நகர், வெங்கடசல நகர், வார்டு எண். 3 கற்பகா நகர், இறைவன் நகர், வார்டுஎண். 4 பழைய கோவில்பட்டி சாலை வார்டு எண். 5 கல்யாணராமபுரம் 2ம் வீதி , வார்டு எண்.7 அடப்பன்வயல் 2ம் வீதி , பள்ளிவாசல் தெரு வார்டு எண். 8 அம்பாள்புரம் 5ம் வீதி, வார்டு எண். 1, 8 சங்கரமடம் வீதி , வடக்கு தெரு சமத்துவபுரம், வார்டு எண். 9,10 வடக்கு 3ம் வீதி, ( வடக்கு 4ம் வீதி தஞ்சாவூர்) வார்டு எண். 11 வடக்கு 4ம் வீதி ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல்., | 2.00 |
| 5 | வார்டு 3 பாலன் நகர், விஸ்வதாஸ் நகர் மற்றும் கைவண்டி தொழிலார் நகர், ராம் நகர் 4ம் வீதி, வார்டு எண்.2 கோவில்பட்டி பிடாரியம்மன் கோவில் தெரு, வார்டுஎண்.4 வடக்கு 2ம் வீதி தஞ்சாவூர் சாலையிலிருந்து கிழக்கு வரை, வார்டு எண்.19 மாப்பிள்ளையார் குளம், வடக்கு 3 வடக்கு 4 , வார்டு எண்.10 அக்ஹாரகாரம் நடுத்தெரு கணேஷ் நகர் 5ம் வீதி, வார்டு எண்.11காமராஜபுரம் 33ம் வீதி வார்டு எண்.13 காமாரஜபுரம் 6, 10 வார்டு எண். 15 காமராஜபுரம் 9,17,18 கணேஷ் நகர் 2ம் விதி வார்டு எண்.36 நிஜாம் காலணி பகுதி அரண்மணை சாலை நகர், வார்டு எண்.28 சக்கரவர்த்தி அய்யனார் சந்து ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |
| 6 | செல்லப்பா நகர் வார்டு எண்.3 , தில்லை நகர், அபிராமி நகர் , வார்டு எண்.3 ஜீவா நகர் வார்டு எண்.3, அன்னசச்சத்திரம் சாலை முதல் பொன்னம்பட்டி சாலை வரை வார்டு எண்.42, காந்தி நகர் 7ம் வீதி 8ம் வீதி வார்டு எண்.32, மேல 3ம் வீதி ( தெற்கு 4ம் வீதி முதல் வடக்கு 4ம் வீதி வரை ) வார்டு எண்.21, மேல 5ம் வீதி குறுக்கு சாலை வார்டு எண்.22, மேல 6ம் வீதி மற்றும் சந்தைப்பேட்டை இரண்டாம் வீதி வார்டு எண்.22 ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |
| 7 | எழில் நகர் வார்டு எண்.36, நியூ கோல்டன் நகர் வார்டு எண்.38, கே.எல்.கே.எஸ். நகர் வார்டு எண்.41, கம்பன் நகர் வார்டு எண்டு 37, தெற்கு 2ம் வீதி ( கீழ ராஜ வீதி முதல் மேல 4ம் வீதி வரை) வார்டு எண்.21, திருவப்பூர் வ.உ.சி. நகர் வார்டு எண்.24, மார்த்தாண்ட புரம் வார்டு எண்.35, தடிகொண்ட அய்யனார் கோவில் ரோடு மற்றும் சத்தியமூர்த்தி நகர் சாலை வார்டு எண்.34, நிஜாம் காலனி ( ஆலங்குடி ரோடு முதல் ஷாஜஹான் வீதி வரை) வார்டு எண்.35, என்.ஜி.ஜி.ஓ. காலனி ( நிஜாம் காலனி ) வார்டு எண்.35 ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |

| | | |
|---|---|---|
| 8 | தமிழ் நகர் வார்டு எண்.41. லெட்சுமி நகர் வார்டு எண்.42, நியூ டைமண்ட் நகர் வார்டு எண்.42, முத்துக்கருப்ப கோனார் நகர் வார்டு எண்.37, பெரியார் நகர் வைரம் பள்ளி சாலை வார்டு எண்.37, திருவள்ளுவர் நகர் 4ம் வீதி மற்றும் குறுக்கு வீதி வார்டு எண்.38, கலீப் நகர் 1ம் விதி முதல் 3ம் வீதி வரை வார்டு எண்.39, மாணிக்கம் நகர் வார்டு எண்.40, பொன்னம்பட்டி சாலை வார்டு எண்.42, பூங்கா நகர் வார்டு எண்.40, நிஜாம் காலனி வார்டு எண்.35 ஆகிய சாலைகளில் தார் தளம் அமைத்தல். | 2.00 |
| | **மொத்தம்** | **16.00** |

## <u>15வது மாநில நிதிக்குழு</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நாள்.6.01.2020ன்படி 20 பணிகளுக்கு ரூ.443.33 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வேலை உத்தரவு 31.1.2020 வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண். 3 வடக்கு 5 நாய்பள்ளம் தெருவில் ரூ.2.00 . மினிபவர் பம்பு அமைத்தல் | 2.00 |
| 2 | வார்டு எண்.8 அம்பாள்புரம் 3ம் வீதியில் ரூ.2.00. மினிபவர் பம்பு அமைத்தல். | 2.00 |
| 3 | வார்டு எண்.9 மேல 4ம் வீதி அம்பாள்புரம் சந்திப்பு ரூ.200 ஆகிய இடங்களில் புதிய மினிபவர் பம்ப் அமைத்தல். | 2.00 |
| 4 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.40 பாரதிதாசன் தெரு, ரூ.2.00.மினிபவர் பம்பு அமைத்தல். | 2.00 |
| 5 | வார்டு எண்.40 கலைவானர் தெரு ரூ.2.00 ஆகிய இடங்களில் மினிபவர் பம்ப் அமைத்தல். | 2.00 |
| 6 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண். 10 வடக்கு 3 மாரியம்மன் கோவில் அருகில் ரூ.2.00. மினிபவர் பம்பு அமைத்தல். | 2.00 |
| 7 | வார்டு எண்.11 கணேஷ் நகர் முதல் வீதி ரூ.2.00 ஆகிய இடங்களில் மினிபவர் பம்பு அமைத்தல். | 2.00 |
| 8 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.1,2,3 பகிர்மான குழாய் அமைத்தல். | 15.00 |
| 9 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.41,42 பகிர்மான குழாய் அமைத்தல். | 10.00 |
| 10 | புதுக்கோட்டை நகராட்சி செல்லப்பா நகரில் பகிர்மான குழாய் அமைத்தல். | 5.00 |
| 11 | புதுக்கோட்டை நகராட்சிக்கு ரோபோர்ட் இயந்திரம் வாங்குதல். | 40.00 |
| 12 | Supply and errection at 90 HP Kashore sludge well Motor as ber specification. | 18.00 |
| | **மொத்தம்** | |

## IV – பொது சுகாதாரம்

### தடுப்பு முறை மருந்துகளும், அமைப்பு பணியாளர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | நகர்நல அலுவலர் | : | 1 |
| 2. | துப்புரவு ஆய்வாளர் | : | 9<br>7 தற்போது பணிபுரிபவர்கள்<br>2 காலி பணியிடம் |
| 3. | ஓட்டுநர் | : | 11<br>10 தற்போது பணிபுரிபவர்கள்<br>1 காலி பணியிடம் |
| 4. | துப்புரவு பணிமேற்பார்வையாளர் | : | 17 |
| 5. | அலுவலக உதவியாளர் | : | 1 |
| 6. | துப்புரவுப்பணியாளர்கள்<br>(31.03.2021) | : | 358<br>195 தற்போது பணிபுரிபவர்கள்<br>163 காலி பணியிடம் |

பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு நகர்பகுதியை 9 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 6 துப்புரவு ஆய்வாளர்கள் கண்காணிப்பில் பொது சுகாதாரப்பணிகள் நிறைவேற்றப்படுகிறது.

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர்களில் கலவை உரத்தயாரிப்பு பயிற்சிப் பெற்றவர்கள் எவரும் இல்லை. நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் முறைப்படி அப்போதைக்கப்போது பிறப்பு, இறப்பு பதிவுகள் பதிவு செய்து வருகிறார்கள்.

**தடுப்பு ஊசி திட்டம் :-**

| வ. எண் | தடுப்பு ஊசி | குறியீடு | முதல் தடவை | 2–வது தடவை | 3–வது தடவை | சாதனை |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஐந்தடுப்பு ஊசி | 1690 | 1668 | 1660 | 1660 | 96.5% |
| 2. | போலியோ சொட்டு மருந்தகம் | 1690 | 1690 | - | - | 100% |
| 3. | தட்டம்மை தடுப்பூசி | 1690 | 1643 | - | - | 97.2% |
| 4. | காசநோய் தடுப்பு ஊசி | 1690 | 1662 | - | - | 98.3% |
| 5. | இசிவு நோய் தடுப்பு ஊசி ( 10 வயது ) | 1830 | 1818 | - | - | 99.3% |
| 6. | தொண்டை அடைப்பான் இரண ஜன்னி வயது 5–6 | 2000 | 1920 | - | - | 96% |
| 7. | தடுப்பு ஊசி (16 வயது) | 2804 | 2341 | - | - | 83.4% |
| 8. | டி.டி.எம்.எம் இரண ஜன்னி தடுப்பு ஊசி கர்ப்பிணி தாய்மார்களுக்கு | 1986 | 1980 | - | - | 99.8% |
| 9. | இரத்த சோகை மாத்திரைகள் குழந்தைகள் 1–12 வருடம் (F.S.T.Small) | 19836 | 18970 | - | - | 83.5% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | இரத்த சோகை மாத்திரைகள் கர்ப்பிணித் தாய்மார்கள் | 1015 | 948 | - | - | 81.2% |
| 11. | வைட்டமின் ஏ கரைசல் | 13600 | 13578 | 13578 | - | 98.5% |
| 12. | குடும்ப நலத்திட்டம் அறுவை சிகிச்சை | 780 | 720 | - | - | 94.7% |
| 13. | குடும்ப நலத்திட்டம் கருத்தடை வளையம் | 800 | 778 | - | - | 97% |

## குடும்ப நலத்திட்டம் குறியீடும் அதன் சாதனைகளும் 2020 –2021 ஆம் ஆண்டு சாதனை விபரங்கள்

| விபரம் | குறியீடு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| அறுவை சிகிச்சை | 760 | 720 | 94% |
| கருத்தடை வளையம் | 800 | 780 | 97.5% |

அறிக்கையாண்டில் குடும்ப நலத்திட்டம் சம்மந்தமாக நகராட்சி பொது நலப்பிரிவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக பிரசாரம் செய்யப்பட்டது.

**2020–2021** ஆம் ஆண்டு குறியீடு **820** குடும்ப கட்டுபாடு **742** பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

## பிறப்பு / இறப்பு விகிதமும் தாய்சேய் நலமும்

அறிக்கையாண்டில் **8** தாய்சேய் நல விடுதிகள் இயங்கி வருகின்றது. **4** மகப்பேறு உதவியாளர்கள், **4** ஆயாக்கள் பணி செய்கின்றனர். மேற்படி பணியாளர்கள் பணியை நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களால் மேற்பார்வையிட்டு வருகிறார். மகப்பேறு உதவியாளர்கள் கர்ப்பிணிகள், இளம் குழந்தை உள்ள தாய்மார்கள், குழந்தைகள் முதலானோர்களை பார்வையிட்டு வேண்டிய ஆலோசனை வழங்கி வருகிறார்கள். தாய்சேய் நலவிடுதியில் சிகிச்சை பார்க்க இயலாத தாய்மார்கள் அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

| **பிறப்பு மற்றும் இறப்புகளின் விகிதம்** | | | |
|---|---|---|---|
| வருடம் | இனம் | மொத்தம் பதிவானது | விகிதம் |
| 2020-2021 | பிறப்பு | 2938 | |
| | இறப்பு | 902 | |

நகரில் எட்டு இடங்களில் அதாவது **1.** காந்திநகர், **2.** காமராஜபுரம், **3.** மச்சுவாடி **4.** மேல **5**ம் வீதி, **5,** திருவப்பூர் பெரிய தெரு, **6.** திருவள்ளுவர் நகர், **7.** அடப்பன்வயல், **8.**கூடல் நகர் ஆகிய இடங்களில் தாய்சேய் நலவிடுதிகள் செயல்பட்டு வருகிறது. தாய்சேய் பணியாளர்களுக்கு நடப்பு ஆண்டில் செலவு ரூ. **38,00,781 /–** சென்ற ஆண்டு செலவு ரூ. **45,94,861/–**ஆக இருந்தது.

| | |
|---|---|
| 2020 –2021 கருத்தரிப்பு பெண்களை பார்வையிட்டது | 1862 |
| 2019– 2020 பிரசவித்த பெண்களை பார்வையிட்டது | 1862 |
| பிரசவம் பார்த்தது | - |
| குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை | – |
| தாய்மார்களின் இறப்பு எண்ணிக்கை | - |

### கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்தல் :-

மல அறை நச்சுத் தொட்டி சுத்தம் செய்ய கழிவுநீர் லாரி நகராட்சி மூலம் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. அதற்கு கீழ்கண்டவாறு கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

| வ.எண் | விபரம் | ரூபாய் |
|---|---|---|
| 1. | நகர் எல்லைக்கு ஒரு நடைக்கு | 500/- |
| 2. | நகர் எல்லைக்கு அப்பால் ஒரு நடைக்கு | 1000/- |
| 3. | நகர் எல்லைக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டருக்கு | 15/- |
| 4. | அறிக்கையாண்டில் இதன் மூலம் வருவாய் | - |

### பொது :-

நகராட்சியால் அரசினர் மருத்துவமனையில் ஒரு தொற்றுநோய் பிரிவு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கு இரண்டு துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

### பன்றி பிடித்தல் விபரம் :-

2020 –2021 ம் நடப்பு ஆண்டில் பன்றிகள் பிடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

### மாடுகள் பிடித்தல் :-

சாலைகளில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் அலைந்து திரியும் மாடுகளை பிடித்து உரிமையாளர்களிடம் அபராதம் விதிக்கப்படுகிறது.

### தொழு நோய் :-

இந்நோய் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நோய் தடுப்பதற்கு நடவடிக்கை நகராட்சியால் கையாளப்படவில்லை. ஆனால், நகராட்சி எல்லைக்கருகில் தஞ்சாவூர் சாலையில் அரசினரால் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் சிகிக்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அரசாங்க மருத்துவமனையில் தடுப்பு முறை சிகிச்சை அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| நரம்பு சிலந்தி நோய் | அறிக்கையாண்டில் இந்த நோயினால் யாரும் பாதிக்கப்படவில்லை. நகராட்சி எல்லைக்குள் இந்நோய் யாருக்கும் ஏற்படவில்லை. |
| பிளேக் | |
| அம்மை | |

**துப்புரவு :-**

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு 42 வார்டுகளிலும் தள்ளுவண்டிகள் மூலம் பெறப்பட்டு வருகிறது. அனைத்து வார்டுகளிலும் வீடுதோறும் சென்று தள்ளுவண்டிகளில் குப்பை வாங்கப்பட்டு வருகிறது. நகராட்சியில் துப்புரவு பணிக்கு கீழ்கண்டவாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| வாகனங்கள் விபரம் | நடை | சேகரிக்ககூடிய குப்பை மற்றும் திடக்கழிவு அளவு ( டன் கணக்கில் ) |
|---|---|---|
| டிப்பர் லாரி – 4 | 12 | 70 டன் |
| கழிவுநீர் அகற்றும் ஊர்தி | 01 | |
| டம்பர் பிளேசர் – 3 | 24 | |
| காம்பாக்டர் – 2 | 6 | |
| இலகு ரக வாகனம் (LCV மினி டாடா ஏசி – 11) | | |
| பேட்டரியால் இயங்கும் தானியங்கி வாகனம் ( BOV மினி டாடா ஏசி – 64) | | |
| கிட்டாச்சி (செயின்டோசர் – 1, மினி டோசர் 1) | | |
| JCB - 1 | | |
| ஜெட் ராய்டு சிறியது – 2 | | |
| ஜெட் ராய்டு பெரியது – 1 | | |
| நாய் பிடிக்கும் வாகனம் – 1 | | |

நாள் ஒன்றுக்கு 70 டன் எடையுள்ள குப்பை மட்டும் சேகரிக்கப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

**கொசு ஒழிப்பு 2020 –2021 :-**

தேசிய கொசு ஒழிப்பு திட்டத்தின் கீழ் பணியாளர்கள் செய்கிறார்கள். இத்திட்டத்திற்கு 500 லிட்டர் பைரத்திரம் , 250 லிட்டர் மாலத்தியான் மற்றும் 500 லிட்டர் அபேட் மருந்து சென்ற ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு 2020 –2021 ஆண்டிற்கு பயன்படுத்தப்பட்டது. இந்நகரை மூன்று பகுதியாக பிரித்து ஒரு பிரிவை நகராட்சி பணியார்களுக்கும், இரண்டு பிரிவு பணியார்களும் கவனித்து வருகிறார்கள். அரசு அங்கீகராம் பெற்ற விற்பனை நிலையத்தில் ஆக்டலிக் மருந்து வாங்கி சாக்கடைகளிலும் தண்ணீர் தேக்கங்களிலும் வளர்ந்த கொசு மற்றும் புழுக்களை அழிக்க தெளிக்கப்படுகிறது.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் யானைக்கால் நோய் கொசு ஒழிப்புத்திட்டத்தில் நகராட்சிப்பகுதியில் 42 வார்டுகளில் தீவிர கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு புதுக்கோட்டை இராஜகோபாலபுரம் பகுதியில் அமைந்துள்ள ஜீவன் சமய கல்வி மன்றம் அறக்கட்டளை மூலமாக புகைப்பான் 1 இயந்திரம் ரூ. 3,72,500./– மதிப்பீட்டில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. கொசு புகைப்பான் 2 மற்றும் 10 கைப்புகையான் நகராட்சி மூலம் வழங்கப்பட்டது. இவ் இயந்திரத்தில் டெக்னிக்கல் மாலத்தியான் என்னும் கொசு ஒழிப்பு மருத்து மழைக்காலங்களில் பரவும் சிக்குன் குன்யா, டெங்கு போன்ற நோய் தடுப்பு நடவடிக்கை

நகராட்சி பணியாளர்களால் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டுவருகிறது. இப்பணியின் வாயிலாகவும் நகரில் கொசு ஒழிக்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் ஏடிஸ் லார்வா ஒழிப்பிற்கு அபேட் கலவை தொடர்ந்து ஊற்றப்பட்டு வருகிறது. இப்பணியின் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை 120 பணியாளர்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2000–ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை (கையாளுதல்) மேலாண்மை MSW (H) விதி 159–ன்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுவீடாக சென்று துப்புரவு பணியாளர் குப்பை அகற்றும் தள்ளுவண்டிகள் மூலம் திடக்கழிவுகள் தன்மை மற்றும் மக்கும் மற்றும் மக்காத தன்மை என இருவகையாக பிரித்து வாங்கப்பட்டு கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

மேற்காணும் திட்டப்பணிக்கு நிறுவனங்கள் குப்பை அகற்ற பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் மற்றும் எலகு ரக வாகனங்கள் மூலமாக திடக்கழிவுகளை பிரித்து வாங்கப்பட்டு கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

**இடுகாடு, சுடுகாடு :-**

நகராட்சிக்குச் சொந்தமான சுடுகாடு மற்றும் இடுகாடுகளை நகராட்சியினரால் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. முகம்மதியார்கள், கிறிஸ்துவர்கள் இடுகாடுகள் அவரவர்களாலேயே நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் போஸ் நகரில் செயல்படும் நவீன எரிவாயு தகன மேடை அனைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**அச்ச, அருவருக்கத்தக்க தொழில்கள் மற்றும் உணவு கலப்பட உரிமையாணைக் கட்டணம்**

2020–2021 ம் நிதியாண்டில் மொத்தம் இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் வசூல் ரூ. 9,50,116/–

**உணவு கலப்படம் :-**

துணை இயக்கநர், சுகாதாரப்பணிகள் புதுக்கோட்டை அவர்களது அலுவலகம் மூலம் உணவு மாதிரி கலப்படம் செயல்பட்டுவருகிறது.

**கீழ்கண்ட முக்கிய விழாக்கள் நடைபெற்றன :- (Covid – 19 க்கு முன் நடைபெற்றன)**

| வ. எண் | விழாவின் பெயர் | நடைபெற்ற இடம் | சுமாராக மக்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மாரியம்மன் கோவில் திருவிழா | திருவப்பூர் | 7,14,211 |

சிறப்பு விழாக்கள் ஏதுவும் நடைபெறவில்லை. விழாக்களுக்கு வேண்டிய துப்புரவு பணிகளும், குடிநீர் வழங்குதலும், விளக்குகள் அமைத்தலும், தற்காலிகமாக மல அறைகள் அமைக்கப்பட்டும், போதிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. அறிக்கையாண்டில் கோவிட்–19 தொற்று நோயின் காரணமாக திருவிழாக்கள் நிறுத்தப்பட்டது.

**குடும்ப நலத்திட்டம் ( அவுட்ரீச் சர்வீஸ் ) திட்டம் :-**

சுகாதாரம் மற்றும் நலத்துறை அரசாணை எண்.764, நாள். 31.03.1988 ன் படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5 இந்நகராட்சியில் அரசாணை எண்.1046, நாள்.23.07.1993 ன்படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5 இந்நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டு 2 நகர் நல மையம் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 2 நகர் நல மையங்கள் காமராஜபுரம் மற்றும் கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் மொத்தம் 20, இதில் 2 மருத்துவ அலுவலர்கள் பணியிடமும், 12 பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் பணியிடமும் காலியாக உள்ளது.

மேற்படி குடும்ப நலத்திட்டத்தை செயல்படுத்திட தொடரும் அரசாணை உத்தரவில் 01.04.2001 முதல் மொத்த செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்குத்தொகை அரசிடமிருந்து ஒரு பங்குத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்ப நலத்திட்ட பணியாளர்களும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.4,17,655/– சம்பளமாக வழங்கப்படுகிறது. மேற்படி இந்திய மக்கள் தொகைத்திட்டம் 5–ல் இரு நகர் நல மையங்களில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 618 வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**குடிநீர் விநியோகம் :-**

புதுக்கோட்டை நகரத்தின் பரப்பளவு 21.95 சதுர கிலோ மீட்டர், 2001–ம் ஆண்டு கணக்குப்படி மக்கள் தொகை 109217 ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 143748 ஆகும். பழுதுகள் உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. 31.03.2021 வரை 119473 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்நகரில் 575 பொதுக்குடிநீர் குழாய்கள் உள்ளன.

**குடிநீர் விநியோகம் பற்றிய விபரங்கள் :-**

| வ. எண் | மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் விபரம் | கொள்ளவு விபரம் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கோவில்பட்டி மேல்நிலைத்தொட்டி | 25.00 |
| 2. | சந்தைப்பேட்டை மேல்நிலைத்தொட்டி | 25.00 |
| 3. | மச்சுவாடி மேல்நிலைத் தொட்டி | 5.00 |
| 4. | மச்சுவாடி தரைமட்ட நீர்தேக்க தொட்டி | 11.25 |
| 5. | பெரியார் நகர் மேல்நிலைத் தொட்டி | 3.40 |
| 6. | போஸ்நகர் மேல்நிலைத்தொட்டி (புதியது ) | 3.00 |
| 7. | லெட்சுமி நகர் மேல்நிலைத்தொட்டி | 2.40 |
| 8. | காந்திநகர் மேல்நிலைத் தொட்டி | 3.00 |
| 9. | திருவப்பூர் மேல்நிலைத்தொட்டி | 3.00 |
| 10. | போஸ்நகர் மேல்நிலைத்தொட்டி (பழையது) | 2.00 |
| 11. | அடப்பன்வயல் மேல்நிலைத்தொட்டி | 2.00 |
| 12. | சின்னப்பா நகர் மேல்நிலைத் தொட்டி | 1.00 |
| 13. | சத்தியமூர்த்தி மேல்நிலைத் தொட்டி | 4.50 |
| 14. | நரிமேடு மேல்நிலைத் தொட்டி | 5.00 |
| 15. | மச்சுவாடி தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 5.00 |
| 16. | லெட்சுமிநகர் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி | 5.00 |
| 17. | இராஜகோபாலபுரம் மேல் நிலைத்தொட்டி | 3.00 |
| | **மொத்தம்** | **108.55** |

மேலும் எல்லை விரிவாக்கப்பகுதிகளான வார்டு எண். 1, 2, 3, 41 மற்றும் 42 ஆகிய பகுதிகளின் 60,000 லிட்டர் கொள்ளவு மற்றும் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட நீரதேக்க தொட்டிகள் 27 எண்ணிக்கைகள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அம்மையாப்பட்டி நீரளிப்பு நிலையத்திலிருந்து வரும் குடிநீர் விநியோகம் பிரதான குழாய் 7.00 கிலோ மீட்டர் நீளமும், ஜீயபுரம் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் பிரதான விநியோக குழாய் 86.03 கி.மீ நீளமும் மொத்தம் 93.03 கி.மீ நீளம் கொண்டதாகும். குடிநீர் விநியோகம் பகிர்மான குழாய் நீளம் 149.75 கி.மீ ஆகும். நாள் ஒன்றுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் 12MLD அம்மையாப்பட்டி 1.00 MLD ஆக மொத்தம் 13.00 MLD குடிநீர் தினசரி 90 LCPD என்ற அடிப்படையில் 27 வார்டுகளுக்கு தினந்தோறும் , 15 வார்டுகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மினிபவர் பம்ப் 545 , அடிபம்ப் 650 , போர்வெல் 44 ஆகியவை மக்கள் உபயோகத்தில் உள்ளது.

| வ. எண் | வைப்புத்தொகை மற்றும் மாதாந்திரக்கட்டண விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | வீட்டு உபயோகம் வைப்புத் தொகை | 2000/– |
| 2. | மாதாந்திர குடிநீர் கட்டணம் (வீட்டு உபயோகம்) | 87/– |
| 3. | வணிக உபயோகம் ( வைப்புத்தொகை) | 5000/– |
| 4. | மாதாந்திர குடிநீர் கட்டணம் ( வணிக உபயோகம்) | 282/– |
| 5. | தொழிற்சாலை உபயோகம் ( வைப்புத்தொகை) | 3000/– |
| 6. | மாதாந்திர குடிநீர் கட்டணம் (தொழிற்சாலை உபயோகம்) | 188/– |

இந்நகராட்சியில் 4 குடிநீர் டேங்கர் லாரிகள் குடிநீர் விநியோகப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர திருமண நிகழ்ச்சிகள் மற்றும் இதரவைபவங்களுக்கு கட்டண அடிப்படையில் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றன.

**சந்தைகள் :-**

சந்தைகள், வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், ஆடுவதை சாலைகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**கேட்பு – 2020 –2021**

| வ.எண் | இனங்கள் விபரம் | கேட்பு | வசூல் |
|---|---|---|---|
| 1. | நாட்சந்தை | 750803/- | 750803/- |
| 2. | வாரச்சந்தை | 3583897/- | 3583897/- |
| 3. | பேருந்து நிலையம் – பேருந்து கட்டண வசூல் | 2199600/- | நிலுவை |
| 4. | ஆடுவதை சாலை | 178605/- | 178605/- |
| 5. | மீன்மார்கெட் | 204750/- | 204750/- |

**அ. சந்தைகள் :-**

நகரில் நான்கு சந்தைகள் உள்ளன. ஒரு வாரச்சந்தை மற்றவை நாளங்கடிகள், காய்கறிகள், மீன் இறைச்சி ஒவ்வொன்றுமாக மூன்று நாளங்காடிகள் உள்ளன.

**வாரச்சந்தை :-**

வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை 01–04–1985 முதல் ஆண்டு அடிப்படையில் ஏலம் விடப்படுகிறது. மூன்று ஆண்டு ஏலத்தொகை விபரம் கீழ்கண்டவாறு உள்ளன.

| வ.எண் | ஆண்டு | வருமானம் தொகை ரூ |
|---|---|---|
| 1. | 2015-2016 | 29,11,100.00 |
| 2. | 2016-2017 | 30,56,655.00 |
| 3. | 2017-2018 | 32,09,488.00 |
| 4. | 2018-2019 | 32,50,700.00 |
| 5. | 2019-2020 | 34,13,235.00 |
| 6 | 2020 – 2021 | 35,83,897/- |

**ஆ. வண்டி நிலையங்கள் :-**

நகரில் வண்டிப்பேட்டை இல்லை. பழையபேருந்து நிலையத்திற்கு அருகிலும், புகைவண்டி நிலையத்திற்கு அருகிலும், வடக்கு ராஜவீதி சந்திப்பிற்கு அருகிலும், ஆக மொத்தம் மூன்று வண்டி நிலையங்கள் இருந்தன. தற்போது குதிரை வண்டிகள் இல்லாததால் அவை தேவையில்லை. ஏனக் கருதி அவ்விடங்களில் அம்மா உணவகம் கட்டப்பட்டுள்ளது மற்றும் கடைகள் மற்றும் கட்டண கழிப்பிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இ. பேருந்து நிலையங்கள் :-**

நகராட்சியில் ‘A’ கிரேடு பேருந்து நிலையம் பராமரிக்கப்படுகிறது. பேருந்து நிலையச் சாலை சிமெண்ட் கான்கீரிட் சாலையாகும். பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்து ஒன்றுக்கு ரூ.15/– வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பேருந்து நிலைய கட்டண வசூல் உரிமை ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டன. இதன் மூலம் வருமானம் பின்வருமாறு.

| வ.எண் | ஆண்டு | வருமானம் தொகை ரூ |
|---|---|---|
| 1. | 2015-2016 | 23,30,000.00 |
| 2. | 2016-2017 | 19,00,100.00 (ஏலம்) |
| 3. | 2017-2018 | 19,95,105.00 |
| 4. | 2018-2019 | 20,94,860.00 |
| 5. | 2019-2020 | 20,16,300.00 |
| 6 | 2020 – 2021 | 2199600.00 |

அறிக்கையாண்டில் பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டாண்டு நவீன கட்டண கழிப்பிடம் 01–04–2020 முதல் 31–03–2021 முடிய வசூலான விபரம்.

| வ. எண் | விபரம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | சைக்கிள் ஸ்டாண்டு | 15,80,250/- | 15,05,000/- | - |
| 2. | புதிய பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடங்கள் இரண்டு | 28,06,966/- | 28,06,966/- | - |
| 3. | பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம். ஒன்று | 3,04,500/- | 3,04,500/- | - |
| 4. | ரொட்டிக்காரசந்து கட்டண கழிப்பிடம் | 84,893/- | 84,893/- | - |
| 5. | சாந்தார் சன்னதி கட்டண கழிப்பிடம் | 1,09,148/- | 1,09,148/- | - |
| | | பழுது | | |

**ஏ. லாரி நிறுத்துமிடம் :-**

நகராட்சி தெற்கு சந்தைப்பேட்டையில் ஆகஸ்ட் 1987– ம் முதல் லாரி நிறுத்துமிடம் இயங்கி வருகிறது. லாரி ஒன்றுக்கு ரூ.10/– வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 01–04–1988 ம் முதல் இந்த உரிமை பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இதன் மூலம் வரவு ரூ.2,09,475/–

**நவீன இறைச்சிகூடம் :-**

நகராட்சியின் ஆடு இறைச்சிக்கூடம் ஒன்றும், மாடு இறைச்சிக்கூடம் ஒன்றும் பராமரிக்கப்படுகிறது. கட்டணம் வசூல் உரிமை குத்தகைக்கு விடப்பட்டது. துப்புரவு பணிக்கு நகராட்சி ஒரு பணியாளரை நியமித்துள்ளது. ஆடு இறைச்சி கூடத்தில் வதை செய்ய ஆடு ஒன்றுக்கு ரூ.20/– வீதம் மாடு இறைச்சி கூடத்தில் வதை செய்ய ரூ.50/– வீதம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | விபரம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | நவீன ஆடு இறைச்சி கூடம் | 178605/- | 178605/- | நிலுவை ஏதும் இல்லை |
| 2. | மாடு இறைச்சி கூடம் | 66150/- | 66150/- | |

**சாக்கடை திட்டம் :-**

நகரில் உள்ள சாக்கடை நீளம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | 6’ அங்குளம் பரிமானமுள்ள குழாய் | **1080.00 மீ** |
| 2. | 0.9’ அங்குளம் பரிமானமுள்ள குழாய் | **127.65 மீ** |
| 3. | 12’ அங்குளம் பரிமானமுள்ள குழாய் | **24.78 மீ** |

| | | |
|---|---|---|
| 4. | தெருக்களில் குறுக்கிடும் குழாய் சாக்கடை | 182.13 மீ |
| 5. | முக்கிய சாக்கடை அங்குளம் | 3.33 மீ |
| 6. | வி. வடிவத்தில் உள்ளவை | 291.76 மீ |
| 7. | வடிகால்களின் மொத்த நீளம் | 1425.23 மீ |
| 8. | முக்கிய சாக்கடைகள் | 1291.75 மீ |
| 9. | இதர சாக்கடை | 1545.10 மீ |

**வடிகால் :-**

நகரில் கீழ்பாகத்திற்கு மட்டுமே சாக்கடை அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பு **2.51** கி.மீ நகரில் மேற்குப்பகுதிக்கு வடிகால் விஸ்தரிப்புக்கு திருச்சி குடிநீர் வடிகால் வாரிய ஆராய்ச்சிப் பிரிவு நிர்வாக பொறியாளரால் ஆய்வு பணி நடைபெற்றுவருகிறது.

தற்போது நீள சாக்கடை திட்டத்தினை **5** பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேல **4**ம் வீதியில் தொடங்கி நகரிலுள்ள **2.50** கி.மீ தொலைவில் உள்ள புல்பண்ணைக்கு செல்லும் முக்கிய குழாயில் இவை இணைக்கப்பட்டுள்ளது. மூலக்குழாய் உள்பட வடிகால் அனைத்தும் ( சி ) வடிவ கல்லினால் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளது.

**புல் பண்ணை பராமரிப்பு :-**

இந்நகராட்சியில் 01—04—1950 முதல் புல்பண்ணை பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் விஸ்தீரனம் 75.82 ஏக்கர் இங்கு புல் பயிரிட்டு புல் அறுவடை செய்து விற்பனை செய்யப்படுகிறது.

நகராட்சி பணியாளர்களை கொண்டு அறுத்து 3 கிலோ புல் ரூ.6/— வீதம் பொது மக்களுக்கு நேரிடையாக விற்பனை செய்யப்படுகிறது. புல்பண்ணை பராமரிப்புக்கென புல் அறுவடைக்கு 15 பணியாளர்களும், புல் விற்பனை செய்ய 2 பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். புல்பண்ணையில் 788 தென்னை மரங்கள் உள்ளது. புல்பண்ணை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதால் நகராட்சி நடப்பாண்டில் ரூ.1,82,028/—க்கு வருமானம் கிடைத்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தென்னை மரம் மூலம் ஆண்டு வருமானம் | கஜா புயல் காரணமாக சுமார் 300 தென்னை மரங்கள் சாய்ந்து விட்டதால் ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 2. | புல் அறுவடை மூலம் ஆண்டு வருமானம் | ரூ.1,82,028/— |

**படகுதுறை :-**

2010—2011 ல் படகுகள் பழுதாகிவிட்டபடியாலும், போதிய பணியாளர்கள் இல்லாததாலும் படகு போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

**நகரமைப்பு பிரிவு :-**

இந்நகரம் மாட்சிமை தங்கிய மன்னர் ஆட்சிக் காலத்தில் நில அளவை செய்யப்பட்டது. பின்னர் தமிழ்நாடு ஆட்சினரால் மாநில அளவை 1999–ம் ஆண்டு செய்யப்பட்டது. நில அளவை பணிகள் யாவும் முடிந்து விட்டது. இந்த விபரம் புதுக்கோட்டை மாவட்ட அரசிதழில் 1973–ம் ஆண்டு தமிழ்நாடு நில அளவையும், எல்லைகளையும் குறித்து எட்டாவது சட்டம் 13–வது பிரிவின் படி 14.03.1977 ல் பிரசுரம் செய்யப்பட்டது.

| நகரமைப்பு பிரிவில் கீழ்காணும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | அலுவலர் மற்றும் பணியாளர்கள் விபரம் | மொத்த பணியிடம் | பணிபுரிபவர்கள் விபரம் | காலிப்பணியிடம் |
| 1. | நகரமைப்பு அலுவலர் நிலை –I | 1 | 1 | – |
| 2. | நகரமைப்பு ஆய்வாளர்கள் | 2 | 2 | – |
| 3. | உதவியாளர் | 1 | 1 | – |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 2 | 2 | – |
| 5. | அலுவலக உதவியாளர்கள் | 3 | 2 | 1 |
| 6. | சங்கிலியாளர் | 1 | 1 | – |

**<u>விரிவு அபிவிருத்தி திட்டங்கள்</u>**

**முழுமை திட்டம் :-**

இந்நகராட்சியில் முழுமைத்திட்டம ( MASTER PLAN) அரசாணை எண்.359, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 19.08.1999–ல் புதுக்கோட்டை உள்ளூர் திட்டப்பணிகளுக்கான மறு ஆய்வு முழுமைத்திட்டம் நகர்புற ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 24(2) ன் கீழ் அரசின் இணக்கம் பெறப்பட்டு, திட்ட மாற்றம் 08–03–2000–ல் மாவட்ட அரசிதழ் அறிவிக்கை செய்தும் 18–07–2002–ல் மாவட்ட அரசிதழ் மற்றும் பொது அறிவிக்கை செய்தும் 17–03–2004–ல் இறுதி ஒப்புதல் பெற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது. G.O.Ms.No. 36, Housing and Urban DTC, dated. 28.10.2004 மறு ஆய்வு முழுமைத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 1 :-**

இத்திட்டம் நகரமைப்பு சட்டம் 1920 பிரிவு 4(3) ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டு அரசால் 01–02–1971 ம் தேதி அரசாணை எண்.260 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி முழுவதும் திருச்சி வீட்டுவசதி வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டு வளர்ச்சி அடைந்துள்ளது. இப்பகுதியில் பல மாறுபாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் தற்போதைய வளர்ச்சியின் படி இத்திட்டத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் 33 (2) படி அறிவிப்பு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 2 :-**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 19–ன் கீழ் புதியதாக அறிவிப்பு செய்யப்பட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயலானை ந.க.எண். 46240/98/டிபி3, நாள். 12–05–1995 மூலம் இணக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. மறு ஆய்வு இணக்கம் ஒப்புதலுக்கு நடவடிக்கையில் உள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 3 :-**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு ஆணையரின் 12–03–1999 ம் தேதி ந.க.எண்.18171/98/டிபி3 எண்ணிட்ட செயல்முறையின்படி விதி 29–ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் சமர்ப்பித்தல், அங்கீகரித்தல் விதி 17–ன் கீழ் அறிவிக்கை நடவடிக்கைகளில் உள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 4 :-**

நகர் ஊரமைப்பு இயக்குநரின் 03–09–1998 தேதிய ந.க.எண். 1126/98/டிபி3 எண்ணிட்ட செயல்முறையின்படி விதி 29–ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. மறு ஆய்வு வி.அ.திட்டம் எண்.4, ஒப்புதல் பெற அரசுக்கு 14–03–2008 ஆம் தேதியில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு வரைபட எண். 5 டிடிபி ( எஸ்.ஐ.ஆர்) / டிட்டி.சி.பி எண். 11/2008, Vide Proc.Roc.NO.18390/06DP3, நாள். 08.04.2008 மறு ஆய்வு இணக்கம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 5 :-**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 ல் பிரிவு 12–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 38775/டிபி3, நாள். 16–03–2000 செயலாணை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மறு ஆய்வு இனக்கமளிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் 5 இறுதி ஒப்புதலுக்கு 07–01–2009 அன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 6 மற்றும் 7 :-**

இத்திட்டங்கள் இரண்டு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டு முறையே நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயலாணை ந.க.எண். 46244/94/டிபி3, நாள். 23–12–1994 மற்றும் ந.க.எண். 46245/டிபி3, நாள். 22–03–1995 மூலம் இணக்கம் அளிக்கப்பட்டதின் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மறு ஆய்வு இணக்கமளிக்கப்பட விரிவு அபிவிருத்தி திட்டம் 6 இறுதி ஒப்புதல் பெறப்பட்டு, அதன் விவரம் அரசு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 ஒப்புதலளிக்கப்பட்டு பிரசுர நடவடிக்கையில் உள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 8 :-**

இந்த திட்டம் தமிழ்நாடு நகரமைப்பு சட்டம் 1920–ன் பிரிவு 12–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 27226/78/டிபி3, நாள். 26.02.1979 செயலானை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதி அங்கீகரிக்கப்பட்டதற்கு மாறாக வளர்ச்சி அடைந்துள்ளதால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 19–ன் கீழ் மீண்டும் அறிவிப்பு செய்து தற்போதைய வளர்ச்சியின் அடிப்படையில் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 9 :-**

நகர் ஊரமைப்பு இயக்குநரின் 15–02–1999 ம் தேதி ந.க.எண். 112898/98/டிபி3 எண்ணிட்ட செயல்முறையின்படி விதி 29–ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. மறு ஆய்வு இணக்கம் நடவடிக்கையில் உள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 10 முதல் 12 :-**

இம்மூன்று திட்டங்களும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19–ன் கீழ் புதியதாக அறிவிப்பு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் இணக்கம் பெற சமர்ப்பிக்கப்பட்டது. மறு ஆய்வு முழுமைத்திட்டம் அரசின் இணக்கம் பெற சமர்ப்பிக்கப்பட்டது. மறு ஆய்வு முழுமைத்திட்டம் அரசின் இணக்கம் பெறப்பட்ட பின்னர் இத்திட்டங்களை இயக்கத்திற்கு சமர்ப்பிக்கும்படி தெரிவிக்கப்பட்டு திரும்ப பெறப்பட்டுள்ளது.

தற்போது புதுக்கோட்டை உள்ளூர் திட்டப்பகுதிக்கான மறு ஆய்வு முழுமைத்திட்டம் அரசால் இணக்கம் அளிக்கப்பட்டுள்ள படியால் மேற்படி மறு ஆய்வு முழுமைத்திட்டத்தின் நில உபயோக அடிப்படையிலும் தற்போது இத்திட்டப்பகுதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ள விரிவு அபிவிருத்தி திட்ட எண்–10 ஐ நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர், சென்னை அவர்களின் இணக்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இணக்கம் அளிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 13 :-**

வரைவு நிலையில் உள்ளது

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 14 :-**

இத்திட்டம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 19–ன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு ஆணையரின் 09–09–1999 ம் தேதி ந.க.எண். 37863/98/டிபி3, எண்ணிட்ட செயல் முறைகளின்படி விதி 29–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 15 :-**

இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 6230/03/டிபி3, நாள். 04–12–2003 ம் தேதிய செயல்முறைகளின் படி பிரிவு 25–ன் கீழ் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 16 :-

வரைவு நிலையில் உள்ளது

## விரிவு அபிவிருத்தி திட்டம் எண்– 21 :-

இத்திட்டம் பிரிவு 25–ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.25979/02/டிபி3, நாள். 30–06–2003 இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | 01–04–2020 முதல் 31–03–2021 வரை வரப்பெற்ற கட்டிட மனுக்கள் | 273 |
| 2. | அனுமதிக்கப்பட்டது | 242 |
| 3. | திருப்பி அனுப்பப்பட்டவை, மறுக்கப்பட்டவை | 31 |
| 4. | 01–04–2020 முதல் 31–03–2021 வரை பெறப்பட்ட மனைப்பிரிவு விண்ணப்பங்கள் | 1 |
| 5. | அனுமதிக்கப்பட்டவை | 1 |
| 6. | மறுக்கப்பட்டவை | – |
| 7. | நிலுவை கட்டிட அனுமதி ( மேல்முறையீடு) | – |

**<u>அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல்.</u>**

புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை நிலை எண். **78**, நாள். **04.05.2017, 172**, நாள். **13.010.2017** மற்றும் **55**, நாள். **02.05.2018** ஆகியவைகளின்படி அனுமதியற்ற மனைப்பிரிவு, மனைகள் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்</u> :-**

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதுக்கோட்டை நகராட்சியில்2018–2019ம் ஆண்டிற்கு நிதி ஏதும் பெறப்படவில்லை. ஆனால் 2017–18ம் ஆண்டில் வீடற்றவர்கள் தங்கும் இல்லத்திற்கு ( SUH) 0.99 இலட்சமும், தெருவோர வியாபாரிகளுக்கு ( SUSV ) மற்றும் சாலையோர வியாபாரிகள் தொடர்பாக நிதி 24.00 இலட்சம் 2015–16 ல் விடுவிக்கப்பட்ட நிதியை 2019–2020ல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அறக்கட்டளை நிதி கணக்கு :-

ஸ்ரீ விஜய ரெகுநாத சதனமானது பழைய அரசு பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ.**862050/–** லிருந்து கிடைக்கும் வட்டியின் மூலம் தமிழ்நாடு தொழில் அபிவிருத்திக் கழத்தாரின் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ.**933162/–** லிருந்து ஆண்டு ஒன்றுக்கு வருடம் வட்டி ரூ.**71119/–** லிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி அறக்கட்டளை பகுதியிலுள்ள மரங்கள் மற்றும் இதர வகையில் வரவு ரூபாய் இல்லை.

**வருவாய் பிரிவு :-**

| வருவாய் பிரிவில் கீழ்கண்டவாறு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் | | | |
|---|---|---|---|
| வ.எண் | அலுவலர் மற்றும் பணியாளர்கள் விபரம் | மொத்த பணியிடம் | காலிப்பணியிடம் |
| 1. | வருவாய் அலுவலர் | 1 | – |
| 2. | வருவாய் ஆய்வர்கள் –2<br>சிறப்பு வருவாய் ஆய்வர் – 1 | 3 | – |
| 3. | வருவாய் உதவியாளர்கள் | 12 | – |

**சொத்துவரி :-**

வாடகை மதிப்பில் ஒரு அரையாண்டிற்கு 01–01–1996 முதல் 12.5 சதவீதம் ஆகும். மேற்படி சொத்து வரியுடன் 2.5 சதவீதம் கல்வி வரியும் , நூலக வரி 1.25 சதவீதம் சேர்த்து மொத்தத்தில் 16.25 சதவீதம் சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

**வரிவசூல் கணினி மயமாக்குதல் :-**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.278/2003/அ3, நாள்.11.07.2003–ன்படி 01–08–2003 முதல் நகராட்சி பழைய அலுவலகம் மற்றும் கம்பன் நகர் ( துப்புரவு அலுவலகம் அருகில் ) மற்றும் நகராட்சி புதிய அலுவலகம் ஆகிய 3 இடங்களில் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் வசூல் மையம் ஆரம்பிக்கப்பட்டு வசூல் பணி நடைபெற்று வருகிறது. இதனால் பொது மக்களே நேரிடையாக வசூல் மையத்திற்கு வந்து பணம் செலுத்தி உடன் ரசீது பெற்று செல்கின்றனர். கேட்பு நிலுவை விபர கேட்பு அறிவிப்பு கணினி மூலம் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது . அதன்படி பொதுமக்கள் வசூல் மையத்திற்கு நேரில் வந்து பணம் செலுத்துவதால் வசூல் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

**தொழில் வரி :-**

ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வந்த வரி விகிதத்தை 01–10–2018 முதல் 35% சதவீதம் உயர்வு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆறுமாத வருமானம் | ரூ.21000/– வரை | இல்லை |
| 2. | ஆறுமாத வருமானம் | ரூ.21000 முதல் 30000 வரை | ரூ.186/– |
| 3. | ஆறுமாத வருமானம் | ரூ.30001 முதல் 45000 வரை | ரூ.463/– |
| 4. | ஆறுமாத வருமானம் | ரூ.45001 முதல் 60000 வரை | ரூ.925/– |
| 5. | ஆறுமாத வருமானம் | ரூ.60001 முதல் 75000 வரை | ரூ.1250/– |
| 6. | ஆறுமாத வருமானம் | ரூ.75001 முதல் அதற்கு மேலும் | ரூ.1250/– |

**அறிக்கையாண்டில் தொழில் வரி வசூல் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது**

**தொழில் வரி :-**

| வருடம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 2020 -2021 | 9210459 | 15288988 | 2459579 | 11298952 | 6750880 | 3990036 |

**தண்ணீர் கட்டணம் :-**

| வருடம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 2020 -2021 | 41568768 | 20672352 | 8533095 | 9094536 | 33035673 | 11577816 |

கீழ்கண்ட விகிதப்படி வசூல் செய்யப்படும் சொத்துவரி மற்ற பயன்பாட்டிற்கு கீழ்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது.

| **பயன் விபரம்** | **அறிக்கையாண்டு சதவிகிதம்** |
|---|---|
| பொதுக்காரியம் | 5.0 சதவிகிதம் |
| குடிநீர் மற்றும் சாக்கடை நீர் | 4.50 சதவிகிதம் |
| மலம் அகற்றும் வரி | 1.5 சதவிகிதம் |
| விளக்கு வரி | 1.5 சதவிகிதம் |
| கல்வி வரி | 2.5 சதவிகிதம் |
| நூலகவரி | 1.25 சதவிகிதம் |
| **மொத்தம்** | **16.25 சதவிகிதம்** |

பொது நூல் நிலைய தீர்வை சொத்து வரி ரூ.1/– ரூ.0.10/– வீதம் வசூல் செய்யப்படுகிறது.

**தங்கும் விடுதி :-**

சத்தியமூர்த்தி தங்கும் விடுதி மராமத்து பணிக்காக அறிக்கை ஆண்டில் பொது ஏலம் விடுவதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலைய தங்கும் விடுதி ஏலம் நிறுத்தப்பட்டுள்ளது. தங்கும் விடுதி அறைகளை கடைகளாக பிரித்து ஏலம் விடப்பட்டு கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

**ஆக்கிரமிப்புகள் :-**

| | |
|---|---|
| 31–03–2021 முடிய ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | 338 |
| அறிக்கையாண்டில் புதிதாக வரப்பெற்றவை | 207 |
| மொத்தம் | 545 |
| நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டவை | 545 |
| நிலுவையில் உள்ளது | 0 |

**சொத்துவரி விகிதம் :-**

மொத்த சொத்துவரியில் வரிவிதிப்பு ஒன்றுக்கு சராசரி ரூ. 1769/– ஆகிறது. 2019–2020 அறிக்கையாண்டில் உள்ள மொத்த வரிவிதிப்புகளின் எண்ணிக்கை 35,890/–காலியிட வரிவிதிப்பு எண். 2151, ஆகமொத்தம் 38,041/– ஆகும்.

**சொத்துவரி / காலியிட வரி – 2020 –2021 :- 59.00% , காலியிட வரி – 59.82 % வசூல் செய்யப்பட்டுள்ளது. ( 31.03.2021)**

கேட்புத் தொகை ( வரி மற்றும் வரியில்லா இனங்கள்)

| கேட்பு விபரம் | ரூபாய் |
|---|---|
| நிலுவை | 41326464 |
| நடப்பு | 67846728 |
| **மொத்தம்** | **109173192** |
| | |
| நிலுவை | 15798988 |
| நடப்பு | 48615016 |
| **மொத்தம்** | **64414004** |
| | |
| நிலுவை | 25527476 |
| நடப்பு | 19231712 |
| **மொத்தம்** | **44759188** |

வரியினம், வரியில்லாத இனம் ஆகிய இனங்களின் நிலுவையை வசூல் செய்ய நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டன. நீதிமன்றம் மூலம் தீர்ப்பின்படி தொகை வசூல் செய்ய நிறைவேற்று மனு தாக்கல் செய்து வசூல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**போக்குவரத்து :-**

புதுக்கோட்டையிலிருந்து இந்நகரை சுற்றியுள்ள கிராமங்களுக்கு சென்று வர தமிழ்நாடு அரசு பேருந்து மற்றும் தனியார் பேருந்து வசதி உள்ளது.

**புதிய கணக்குமுறை ( New Accounting System) :-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி2) துறையின் **06.01.1999**–ம் தேதிய அரசாணை ( நிலை) எண். **8**–ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய கணக்கு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கிணங்க **01–04–2000** முதல் இந்நகராட்சியில் புதிய கணக்கு (Double Entry System) நடைமுறை அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய கணக்கு முறை அமுல்படுத்தப்பட்டதில் நகராட்சியின் வரவு, செலவு பற்றிய விபரம் அந்தந்த மாதம் அறிந்து கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் சொத்துகள் மற்றும் கடன் பற்றிய விவரங்கள் அறிந்து கொள்ள வாய்ப்புகள் உள்ளது.

**நகராட்சி வரவினங்கள் – 2020 –2021 :-**

| வ. எண் | விபரங்கள் | பொதுநிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | கூடுதல் |
|---|---|---|---|---|---|
| 1. | சொத்துவரி | 50277111.22 | 20236221 | 1125398.76 | |
| 2. | இதர வரிகள் | 28099125 | 40060036 | - | |
| 3. | பிறதுறைகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் வரவினங்கள் | 27136457 | - | - | |
| 4. | மாநில நிதி ஆணைய நிதி வரவினங்கள் | 144351264 | - | - | |
| 5. | சேவைக்கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் | 12237712 | 152162 | 35256 | |
| 6. | மான்யங்கள் பங்குத் தொகைகள் | 286037560 | - | - | |
| 7. | விற்பனை மற்றும் | 1291415 | - | - | |
| | வாடகைகள் | 773748 | - | - | |
| | கட்டணங்கள் | - | - | - | |
| 8. | இதர வரவினங்கள் | 3528539 | - | - | |
| | கூடுதல் | | | | |

**நகராட்சி செலவினங்கள் –2020 -2021:-**

| வ. எண் | விபரங்கள் | பொதுநிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்ப கல்வி நிதி | கூடுதல் |
|---|---|---|---|---|---|
| 1. | பணியாளர் ஊதியம் மற்றும் இதர படிகள் | 173738874 | 13984921 | - | – |
| 2. | ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலவுகள் | 76869326 | - | - | – |
| 3. | இயக்கச் செலவுகள் | 84257129 | 66144069 | - | |
| 4. | பழுது மற்றும் பராமரிப்பு செலவுகள் | | | | |
| 5. | திட்டச் செலவுகள் | 18457141 | - | - | – |
| 6. | நிர்வாகச் செலவுகள் | 7175263 | 322335 | 7984 | |
| 7. | நிதி சார்ந்த செலவுகள் | 5081953 | 621335 | - | – |
| 8. | கழிவுகள் | - | - | - | – |
| 9. | மற்றவை | - | - | - | - |

**வருவாய் நிதி :-**

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 74273462.53 |
| வரவு | 338096892.37 |
| கூடுதல் | 412370354.80 |
| செலவு | 386842601 |
| ஆண்டு இறுதி இருப்பு | **25527753.80** |

**குடிநீர் விநியோக நிதி 2020 –2021 :-**

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 39362762.73 |
| வரவு | 61015816.08 |
| கூடுதல் | 100378578.81 |
| செலவு | 78996285 |
| ஆண்டு இறுதி இருப்பு | **21382293.81** |

**ஆரம்ப கல்வி நிதி :-**

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 236629402.73 |
| வரவு | 11297992.76 |
| கூடுதல் | |
| செலவு | 7111896 |
| ஆண்டு இறுதி இருப்பு | |

**கடன் – 2020 –2021 :-**

| | |
|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் உள்ளது | 73830959.00 |
| அறிக்கை ஆண்டில் பெறப்பட்டது | - |
| அசல் செலுத்தப்பட்டது | 8000000.00 |
| வட்டிக்காக செலுத்தப்பட்டது | 5278993.00 |
| நிலுவை ( ஆண்டு இறுதியில் | **35830959.00** |

**கடன் நிலுவை விபரம் 2020 -2021 :-**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி – TUFIDCO | 35830959.00 |
| 2. | IDSMT | 6401026 |

**தணிக்கைத்தடை நிலுவை விபரங்கள் :-**

| | | |
|---|---|---|
| 1 | 1989 – 1990 | 5 |
| 2 | 1992 – 1993 | 1 |
| 3 | 1993 – 1994 | 7 |
| 4 | 1994 – 1995 | 8 |
| 5 | 1997 – 1998 | 1 |
| 6 | 2000 – 2001 | 8 |
| 7 | 2001 – 2002 | 9 |
| 8 | 2003 – 2004 | 7 |
| 9 | 20004 – 2005 | 9 |
| 10 | 2005 – 2006 | 6 |
| 11 | 2006 – 2007 | 8 |
| 12 | 2007 – 2008 | 1 |
| 13 | 2008 – 2009 | 3 |
| 14 | 2009 -2010 | 7 |
| 15 | 2010 – 2011 | 9 |
| 16 | 2011 – 2012 | 11 |
| 17 | 2012 – 2013 | 9 |
| 18 | 2013 – 2014 | 14 |
| 19 | 2014 -2015 | 27 |
| 20 | 2015 -2016 | 50 |
| 21 | 2016 – 2017 | 74 |
| 22 | 2017 – 2018 | 125 |
| 23 | 2018 – 2019 | 185 |
| | மொத்தம் | 595 |

**பொது :-**

புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டு கண்ட தேர்வுநிலை நகராட்சியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் , மாண்புமிகு தமிழக துணை முதல்வர், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் , உயர்திரு. நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் நகராட்சியின் செயல்பாட்டை கண்காணித்தும், தேவையான நிதி உதவி செய்தும் புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகள் ஆகியவற்றை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி.

# மன்றபொருள்

ந.க.எண். 6468/2019/சி3.

புதுக்கோட்டை நகராட்சியின் 2019–2020ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் பதிவு செய்த ஒப்புதல் வழங்கலாம் ( சி3/6468/2019)

ஆணையாளர்
புதுக்கோட்டை நகராட்சி

# மன்றபொருள்

ந.க.எண். 4738 /2020 /சி3.

புதுக்கோட்டை நகராட்சியின் 2020 – 2021 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம் ( 4738/2020/சி3)

ஆணையாளர்<br>
புதுக்கோட்டை நகராட்சி